# உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன். 2 எரே 15 : 20

**இயேசு பெருக வேண்டும் நான் சிறுக வேண்டும்**

சகோதரியே, நீ சிறுக வேண்டும். சகோதரனே, நீ குறுக வேண்டும். இப்பொழுதுதான் உன் மூலம் இயேசு பெருகுவார்.

**இதைத்தான் யோவான் 3:30 சொல்கிறது.**

அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும். என்பதாக

புத்தாண்டில் கால் அடி எடுத்து வைக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, உடன் ஊழியரே,

இன்று ஒரு தீர்மானம் செய்யுங்கள், இந்த ஆண்டில், நான் சிறுக வேண்டும், இயேசு பெருக வேண்டும் – என்பதாக.

அநேகர் நான் பெருக வேண்டும் என்று வாஞ்சிக்கிறபடியால் தான் பெருக முடியவில்லை.

ஆதலால் நான் சிறுக வேண்டும் என்று வாஞ்சியுங்கள்.

உங்கள் மூலம் இயேசுவின் புகழ் பெருக வேண்டும். இதைத்தான் இந்த ஆண்டு கர்த்தர் விரும்புகிறார்.

**யாத்திராகமம் 20:24 சொல்கிறது.**

நான், என் நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும், எந்த ஸ்தானத்திலும், உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசிர்வதிப்பேன் – என்பதாக.

**உன்னை மிகவும் திரளாய் பெருகப் பண்ணுவேன்**

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைப் பார்த்து கர்த்தர் சொன்ன வசனம் தான், இன்று நம்மையும் உயிர்ப்பிக்கிறது.

பெயர் சொல்ல கர்ப்ப பிறப்பு இல்லையே என்று தவிக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே,

**கர்த்தர் உன்னை மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவார்.**

தொட்டதெல்லாம் நஷ்டம் என்று தவிக்கும் என் அன்பு செல்வங்களே.

பில்லி சூனியத்தால் என் குடும்பம் உடைந்து போனதே என்று அங்கலாய்க்கும் சகோதரியே. என் சம்பாத்தியமெல்லாம் ஆஸ்பத்திரீக்கு போகிறதே என்று மனம் உடைந்து போன என் அன்பரே,

வட்டி கொடுத்து கட்டவில்லையே என நொறுங்கிப் பபோன தேவனுடைய பிள்ளையே, இழந்து போன சம்பாத்தியத்தை மீண்டும் பெற முடியவில்லையே என துக்கத்தில் மூழ்கிப்போன நண்பரே, தூரப்பயணம் எப்போ ?–என ஏக்கத்துடன் ஜெபிக்கும் அருமையானவரே, இந்த வருடத்திலாவது வேலை கிடைக்குமா அல்லது, திருமணம் நடக்குமா, தொழில் தொடங்கலாமா ? என ஆழ்ந்து சிந்திக்கும் அன்பரே, சபையில் ஆத்துமாக்கள் இல்லையே, என உள்ளம் உடைந்து ஜெபிக்கும் என் உடன் ஊழியரே.

**கர்த்தர் சொல்கிறார்**

**உன்னை மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவேன் – என்பதாக**

**நீங்கள் செய்ய வேண்டியது,**

உங்களுக்கு கிடைத்த நேரத்திலே, பணத்திலே, பலத்திலே, படிப்பிலே, தாலந்துகளிலே கர்த்தருக்கு முதலிடம் கொடுங்கள், திராணிக்கு மிஞ்சி கொடுங்கள்.

**இயேசுவுக்காக செலவு பண்ணுங்கள்**

**இயேசுவுக்காக செலவு பண்ணப்படுங்கள்**

**கண்ணையும் பிடுங்கிக் கொடுக்க ஆயத்தமாகுங்கள்**

**நீங்கள் உங்களை சிறுகும்படி ஒப்புக் கொடுக்கும்பொழுது**

**தேவன் உங்களை பெருகும்படி ஆசிர்வதிப்பார். ஆமென்.**

**இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம்,**

**பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும், அப்பொழுது முடிவு வரும்.**